ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1793/3 - 2013 ජනවාරි මස 15 වැනි අඟහරුවාදා - 2013.01.15
*1793/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 25/73*

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அதன் 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுக்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்தானந்த அளுத்கமகே,
விளையாட்டுத்துறை அமைச்சர்.

விளையாட்டுத்துறை அமைச்சு,
கொழும்பு,
*2013, சனவரி 15.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுக் கழகங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதற்கான அட்டவணை II இல் விவரிக்கப்பட்ட ஏதேனும் விளையாட்டு தொடர்பில் ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தைப் பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், விளையாட்டுக்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சருக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் 'அ' வில் இருத்தலும் வேண்டும் ; அத்துடன் அது, அத்தகைய தேசியக் கழகத்தின் தலைவரினாலும் செயலாளரினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும். உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பம் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

3. தேசிய விளையாட்டுக் கழகமொன்றைப் பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) தேசிய கழகத்தின் அமைப்புவிதியின் பிரதியொன்று ;

(ஆ) அத்தகைய தேசியக் கழகத்தின் செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய கழகத்தின் கடைசி மூன்று வருடாந்த பொதுக்கூட்டங்களின் நிகழ்ச்சிக்குறிப்புகளினது பிரதிகள், அல்லது பதிவுக்கான அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து மூன்றாண்டுகளினுள் அத்தகைய தேசியக் கழகம் அமைக்கப்பட்டவிடத்து, ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்தினதும் நிகழ்ச்சிக்குறிப்புகளின் பிரதிகள் ;

(இ) கடைசி மூன்று வருடாந்த பொதுக்கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட அத்தகைய தேசியக் கழகத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுக்களின் பிரதிகள், அல்லது பதிவுக்கான அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து மூன்றாண்டுகளினுள் அத்தகைய தேசியக் கழகம் அமைக்கப்பட்டவிடத்து, வருடாந்தப் பொதுக்கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட எல்லாக் கணக்குகள் பற்றிய கூற்றுக்களினதும் பிரதிகள் ;

(ஈ) அத்தகைய தேசியக் கழகத்தின் தற்போதைய பதவிதாங்குநர்களினதும் குழு உறுப்பினர்களினதும் பெயர்களும், முகவரிகளும் ;

(உ) அத்தகைய தேசியக் கழகத்தின் எல்லா இணைப்புக்களினதும் பெயர்களும், முகவரிகளும், அத்தகைய ஒவ்வோர் இணைக்கப்பட்ட குழுவிலுமுள்ள எண்ணிக்கையும் மற்றும் ஒரு களரி அல்லது ஒழுங்கமைப்பு தேசியக் கழகத்துடன் இணைந்துள்ள ஒரு மாகாணக் கழகம், மாவட்டக் கழகம், சம்மேளனம், குழுமம் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்பு என்பவற்றுடன் இணைந்துள்ளவிடத்து, அத்தகைய மாகாணக் கழகத்தின், மாவட்டக் கழகத்தின், சம்மேளனத்தின், குழுமத்தின் அல்லது வேறு ஒழுங்கமைப்பின் இணைப்புக்களினது பெயர்களும், முகவரிகளும், எண்ணிக்கையும் ;

(ஊ) ஏதேனும் தேசியக் கழகத்தைப் பதிவு செய்யுமுன்னர், விளையாட்டுக்கள் பணிப்பாளர் தலைமையதிபதி, தாம் அவசியமெனக் கருதுகின்ற ஏதேனும் மேலதிகத் தகவலைக் கோரலாம்.

4. பணிப்பாளர் தலைமையதிபதி, விளையாட்டுக்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தேசியக் கழகங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். அந்த இடாப்பு, பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் 'ஆ' இல் இருக்க வேண்டும்.

5. அமைச்சர், பதிவுக்காக விண்ணப்பிக்கின்ற தேசியக் கழகம் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகியுள்ளதெனத் திருப்திப்படின், பதிவுக் கட்டணமாகவுள்ள ஐயாயிரம் ரூபாவான பணத்தொகையை அனுப்பிவைக்கும்படி தேசியக் கழகத்துக்கு அறிவிக்குமாறு பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்.

6. பதிவுக் கட்டணத்தைப் பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய தேசியக் கழகத்தைப் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன், பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் 'இ' இல் இருக்க வேண்டிய பதிவுச் சான்றிதழொன்றை அத்தகைய தேசியக் கழகத்துக்கு வழங்குதலும் வேண்டும். அத்தகைய சான்றிதழ் முன்னரே இல்லாதாக்கப்பட்டாலொழிய அல்லது இடைநிறுத்தப்பட்டாலொழிய, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேசிய கழகம் உரியமுறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதென எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவான சான்றாதல் வேண்டும்.

7. ஒவ்வொரு தேசியக் கழகமும், பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துக்கமைய அத்தகைய தேசியக் கழகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பதிவு செய்யப்பட்ட களரிகளினதும், ஏனைய ஒழுங்கமைப்புகளினதும் சேர்க்கையாக இருக்கக்கூடிய இணைப்புக்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

8. ஒவ்வொரு தேசியக் கழகமும், அத்தகைய தேசியக் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவில் இயைபான பாடசாலைக் கழகங்களின் ஆகக்குறைந்தது இரண்டு பிரதிநிதிகள் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அதன் அமைப்புவிதியில் ஏற்பாடொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இயைபான பாடசாலைக் கழகங்களின் அமைப்புவிதியை அங்கீகரிக்கும்போது, தேசியக் கழகம் ஒவ்வொன்றும், தேசியக் கழகங்களிலிருந்து அதன் குழுக்களுக்குப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவதற்காக அத்தகைய அமைப்புவிதியில் ஏற்பாடிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9. பாடசாலைக் கழகங்கள் எல்லாம், தேசியக் கழகத்துக்கும் பாடசாலைக் கழகங்களுக்கும் இடையே பரஸ்பர ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இயைபான விளையாட்டுப்பற்றித் தேசியக் கழகத்தின் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. தேசியக் கழகங்களின் குழுக்கூட்டங்கள் ஆகக்குறைந்தது மாதமொன்றுக்கு ஒரு தடவையேனும் நடைபெறுதல் வேண்டுமென்றும், பாடசாலைக் கழகங்களின் ஆகக்குறைந்தது ஒரு பிரதிநிதியேனும் அத்தகைய கூட்டங்களில் சமூகமளித்தல் வேண்டுமென்றும், அத்தகைய ஒவ்வொரு தேசியக் கழகமும் அதன் அமைப்புவிதியில் ஏற்பாடொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. எந்தக் குறிப்பிட்ட விளையாட்டுக்காக அல்லது விளையாட்டுக்களின் தொகுதிக்காகத் தேசியக் கழகமொன்று அமைத்துருவாக்கப்பட்டுள்ளதோ அந்தக் குறிப்பிட்ட விளையாட்டில் அல்லது விளையாட்டுக்களின் தொகுதியில் ஈடுபட்டுள்ள களரிகளையும் ஏனைய ஒழுங்கமைப்புகளையும் தேசியக் கழகம் பதிவு செய்தல் வேண்டும். விளையாட்டுக்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்படும் ஏதேனும் தேசியக் கழகம், இயைபான உலக ஆளும் குழுவில் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையதாதல் வேண்டும்.

*12 (1)* ஒரு தேசியக் கழகத்தின் பதவிதாங்குநர்களும் குழு உறுப்பினர்களும் இரண்டாண்டுக்காலப்பகுதியைக் கொண்டிருக்க வேண்டியவொரு காலத்துக்கு வருடாந்த பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் என்ற பதவியில் ஏற்படுகின்ற ஏதேனும் வெற்றிடம் ஒரு விசேட பொதுக்கூட்டத்தில் நிரப்பப்படலாம். வேறேதேனும் வெற்றிடம் வருடாந்த பொதுக்கூட்டத்திலான உறுதிப்படுத்துகைக்கமைய, குழுக் கூட்டமொன்றில் நிரப்பப்படலாம்.

*(2)* வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிதாங்குநர்களுடன் மற்றும் குழு உறுப்பினர்களுடன் சேர்த்து மேலதிகமாக, அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, விளையாட்டுக்கள் என்ற துறையில் அனுபவமுடைய அல்லது தகைமைகளையுடைய அல்லது ஆற்றலை வெளிக்காட்டியுள்ள ஓர் ஆளை, அமைச்சர், ஒரு தேசியக் கழகத்தின் குழுவுக்கு நியமிக்கலாம்.

*(3)* பணிப்பாளர் தலைமையதிபதி, விசாரணையின் பின்னர், செயலிழந்ததாகவுள்ளதும், ஒரு தேசியக் கழகத்துடன் இணைந்துள்ளதுமான ஏதேனும் களரியின் பிரதிநிதிகளைக் குழுவிலிருந்து அகற்றலாம். களரியொன்று முன்னைய பஞ்சாங்க ஆண்டின்போது கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிரற்போட்டியில் பங்குபற்றாதிருந்திருப்பின் அத்தகைய களரி செயலிழந்ததாகக் கொள்ளப்படும்.

*13. (1)* ஒரு தவணைக்கு ஏதேனும் தேசியக் கழகத்தின் அல்லது சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், துணைத் தலைவர், உதவிச் செயலாளர் அல்லது உதவிப் பொருளாளர் என்பவராகப் பதவிக்காலமொன்றுக்குச் சேவையாற்றியுள்ள ஆளெவரும், மேலேயுள்ள பதவிகளுள் எவற்றுக்கும் மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது ;

ஆயின், அத்தகைய மீள்தேர்தலுக்காக விளையாட்டுக்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் எழுத்திலான அனுமதி பெறப்பட்டிருப்பின், மேலேயுள்ள மட்டுப்பாடு ஏற்புடையதாதலாகாது.

*(2)* அமைச்சர், மீள்தேர்தலை நாடுகின்ற பதவிதாங்குநர்களின் பதவிக்காலத்தைக் கவனத்துட்கொண்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் இன்னுமோராண்டுக் காலப்பகுதிக்காக அத்தகைய ஆட்களின் மீள்தேர்தலுக்கு அனுமதியளிக்கலாம் :-

(அ) மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் விளையாட்டுகளின் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அளவு ;

(ஆ) பின்வருவனவற்றுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை :-

(i) முறையான தேசியக் குழுவின் புரிகை மட்டத்தை அதிகரித்தல் ;

(ii) விளையாட்டுக்கள் தொடர்பாகச் செயல்திறனுடைய ஆட்களை இனங்காணுதல் ;

(iii) விளையாட்டுக்கள் தொடர்பான நிர்வாகத்தின் வெளிப்படையானதன்மையை உறுதிப்படுத்துதல் ;

ஆயின், சொல்லப்பட்ட பதவிகளுள் ஏதேனுமொன்றில் ஆளொருவர் எக்காலப்பகுதியின்போது சேவையாற்றுக்கின்றாரோ அக்காலப்பகுதி, கூட்டுமொத்தத்தில் நான்கு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

*14.* ஆளெவரும், ஒரு தடவையில் அணி நிகழ்ச்சியொன்றிற்காக முறையான அந்த விளையாட்டில் அல்லது தொகுதி விளையாட்டில் மற்றும் தனிப்பட்ட நிகழ்ச்சியில் அல்லது விளையாட்டுக்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தாலொழிய, அல்லது ஏதேனும் தேசியக் கழகத்தினால் பதிவு செய்யப்பட்ட, மேம்படுத்தப்பட்ட, நடாத்தப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாரிய நிரற்போட்டியொன்றில், விளையாட்டுப்போட்டியொன்றில் அல்லது போட்டியொன்றில் அக்கழகத்தினால் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுக்களில் இரு தடவைகளுக்கு மேல் பங்குபற்றியிருந்தாலொழிய, அவர் அக்கழகத்தின் பொருளாளராக அல்லது உதவிப் பொருளாளராகத் தவிர, அக்கழகத்தின் பதவிதாங்குநராக அல்லது குழுவுறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பெயர் குறித்து நியமிக்கப்படுதலாகாது. அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் வேறெவரேனுமாள் தேர்தலுக்காகப் பெயர்குறித்துநியமிக்கப்படலாம்.

*15. (1)* ஆளொருவர் பின்வருமாறிருப்பின், ஏதேனும், தேசியக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது அதில் ஏதேனும் சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற உத்தியோகத்தை வேறுவகையில் வகிப்பதற்கு அல்லது தொடர்ந்து வகிப்பதற்கு அல்லது சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற ஏதேனும் பதவியை வகிப்பதற்கு அல்லது அதன் குழுவொன்றின் உறுப்பினராகவிருப்பதற்கு அல்லது தேசியக் கழகமொன்றில் இணைந்துள்ள களரியொன்றின் அல்லது ஒழுங்கமைப்பொன்றின் நியமித்தரொருவராகவிருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும் :-

(அ) அவர் சித்தசுவாதீனமற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்படின் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் ;

(ஆ) அவர் கடனிறுக்கவகையற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்படின் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் ;

(இ) ஏதேனும் தவறுக்கு ஒரு சட்ட மன்றத்தில் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதுடன் ஆறு மாதங்களுக்கு குறையாத மறியற் தண்டனை.

(ஈ) அவர் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகத்தில் உயர்தொழில்சார் செய்தியறிக்கையாளராகவிருப்பின் அல்லது அத்தகைய வலையமைப்பின் சொந்தக்காரராகவிருப்பின் ;

(உ) அவர் குறிப்பிட்ட விளையாட்டுக் கழகத்தில் போட்டியாளரொருவரின் பெற்றோராக அல்லது உடன் பிறந்தவராகவிருப்பின் ;

(ஊ) அவர் ஓர் அணியின் அல்லது தனிப்பட்ட போட்டியாளரின் தற்போதைய பயிற்றுவோனாக அல்லது நடுநிலையறிஞனாகவிருப்பின் ; ஆனால் அக்கழகத்திலிருந்து தகவுடைய வேறு போட்டியாளரெவரும் இல்லாதிருப்பின் அத்தகைய ஆள் அமைச்சரின் அனுமதியைப் பெறுதல் வேண்டும் ;

(எ) அவர் ஒரு விளையாட்டுக்கள் ஆளணியினரின் ஆட்டக்காரராக, முகவராக அல்லது முகாமையாளராகவிருப்பின் ;

(ஏ) அவர் இலங்கை நாட்டவரல்லாதவராகவிருப்பின் ;

(ஐ) அவர் அத்தகைய விளையாட்டுத் தொடர்பான விளையாட்டுப் பொருட்களை, துணைக்கருவியை, ஏதேனும் இனத்தை அல்லது சாதனத்தை உற்பத்தி செய்வதில், ஒழுங்கமைப்பதில், தயாரித்தலில், விற்பனை செய்வதில் அல்லது விநியோகிப்பதில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சம்பந்தப்பட்டுள்ளவராகவிருப்பின்;

(ஒ) அவர் வேட்டையாடுதல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சம்பந்தப்பட்டுள்ளவராகவிருப்பின் ;

(ஓ) அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தாலொழிய, அவர் விளையாட்டுக்கள் அமைச்சில் தொழிலுக்கமர்த்தப்பட்டவராகவிருப்பின் ;

(ஔ) அவர் பணிப்பாணை பறிக்கப்பட்டுள்ளவரான ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராகவிருப்பின் ; அல்லது

(க) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவர் பணம் தூய்தாக்கல் என்ற தவறுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவராகவிருப்பின் ;

(ங) விளையாட்டுடன் தொடர்புடைய செயற்பாட்டிற்காக விளையாட்டுக்கள் அமைச்சரின் அங்கீகாரத்துடன் நாட்டைப் பிரதிநிதித்துவப்படும் ஆளொருவர் உரிய நேரத்தில் திரும்பாதவிடத்து.

(2) அமைச்சர் உரிய விசாரணையின் பின்னர், ஆளொருவர் ஏதேனும் தேசியக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது அதில் ஏதேனும் கம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற பதவியை வேறுவகையில் வகிப்பதற்கு அல்லது தொடர்ந்து வகிப்பதற்கு அல்லது அதன் குழுவொன்றின் உறுப்பினராகவிருப்பதற்கு அல்லது ஒரு தேசியக் கழகத்தில் இணைந்துள்ள களரியின் அல்லது ஒழுங்கமைப்பின் நியமித்தராகவிருப்பதற்கு இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் தகைமையற்றவராகவுள்ளாரெனத் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய ஆளைச் சொல்லப்பட்ட உத்தியோகத்திலிருந்து, பதவியிலிருந்து அல்லது குழுவிலிருந்து அகற்றும்படி அல்லது நியமத்தர் என்ற அவரது அகற்றும்படி அவர் உடனடியாகப் பணித்தல் வேண்டும்.

16. ஒரு தேசியக் கழகத்தின் பதவிதாங்குநர்களாகவும் குழுவுறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான எல்லாப் பெயர் நியமனங்களும், வாக்களிப்பதற்குத் தகவுடையதும், உறுப்பினராகவுள்ளதுமான ஏதேனும் களரியின் அல்லது ஒழுங்கமைப்பின் தலைவரினால் அல்லது செயலாளரினால் முன்மொழியப்படுதலும், வாக்களிப்பதற்குத் தகவுடையதும், உறுப்பினராகவுள்ளதுமான வேறேதேனும் களரியின் அல்லது ஒழுங்கமைப்பின் தலைவரினால் அல்லது செயலாளரினால் வழிமொழியப்படுதலும் வேண்டும். அத்தகைய பெயர்நியமனம், அவர்களின் சுய விவரங்களுடன் சேர்த்து வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் கையளிக்கப்படுதல் வேண்டும் அல்லது அவரைச் சென்றடையும் வகையில் அஞ்சலிலிடப்படுதல் வேண்டும். அதன்பின்னர் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் பிரதிநிதி, அத்தகைய கழகத்தின் விசேட குழுக்கூட்டத்தில் பெயர்நியமனங்களைத் திறத்தல் வேண்டும். பெயர் நியமனப்பத்திரங்களின் பிரதியொன்று, விண்ணப்பகாரரின் சுய விவரங்களுடன், வருடாந்த பொதுக்கூட்டத்துக்கு ஆகக்குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

17. ஏதேனும் தேசியக் கழகத்தின் ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டமும் தேசியக் கழகத்தினால் முடிபுசெய்யப்படும் ஓரிடத்திலும் திகதியன்றும், நேரத்திலும் பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடனும் நடைபெறுதல் வேண்டும். ஏதேனும் தேசியக் கழகத்தின் பொதுக்கூட்டத்திலும் வருடாந்த பொதுக்கூட்டத்திலுமான தேர்தல்களும் முடிவுகளும் பகிரங்க வாக்கின்மூலமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், வாக்களிப்பின் விவரங்கள் அத்தகைய கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும். பணிப்பாளர் தலையதிபதியின் பிரதிநிதி அந்நேரத்தில் சமுகமாகவிருத்தல் வேண்டும்.

18. தேசியக் கழகம் ஒவ்வொன்றும், அத்தகைய கழகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிதாங்குநர்களினதும் குழுவுறுப்பினர்களினதும் சுய விவரங்களை, அத்தகைய கழகத்தின் அத்தகைய குழுவுறுப்பினர்களையும் பதவிதாங்குநர்களையும் தேர்ந்தெடுத்ததிலிருந்து பதினான்கு நாட்களினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

19. (1) ஏதேனும் விளையாட்டில் மூன்று தடவைகளுக்கு மேல் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளவர்களும் அல்லது பாரிய நிரற்போட்டிகளில், போட்டிகளில் அல்லது விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளவர்களுமான ஆட்களிலிருந்து, அமைச்சர், ஒரு தேசியக் கழகத்தின் தெரிவு, தரப்படுத்துகை மற்றும் இசைவளிப்புக் குழுக்களை நியமித்தல் வேண்டுமென்பதுடன், முறையான விளையாட்டில் எவரேனும் போட்டியாளரின் எவரேனும் பெற்றோரை அல்லது உடன்பிறந்தவரை அவரை உள்ளடக்குதலுமாகாது. தேசியக் கழகம், பத்து ஆட்களின் பெயர்களைக் கவனத்துட்கொள்ளப்படுவதற்தாக அத்தகைய குழுக்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தேசியக் கழகத்தின் எந்தக் குழுதொடர்பில் அத்தகைய நியமனங்கள் செய்யப்படவேண்டுமோ அந்தக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களை அமைச்சர் கவனத்துட்கொள்ளலாம்.

(2) தேசியக் கழகம், தேசியத் தெரிவாளர்களின் ஒருப்பாட்டுடன், தெரிவுக் கட்டளைக்கற்கள் பற்றிய கொள்கையொன்றை வரைதல் வேண்டும்.

(3) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதினால், (1) ஆம் பந்தியின்கீழ் அவரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் எவரேனும் உறுப்பினரை எவையேனும் காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

20. ஒரு தேசியக் கழத்தின் தெரிவு, தரப்படுத்துகை மற்றும் இசைவளிப்புக் குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அவ்விளையாட்டின் பயிற்றுவோன், அத்தேசியக் கழகத்தின் தெரிவுக் குழுவினால் தெரிவு செய்யப்படவேண்டிய ஏதேனும் அணிக்குத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

ஆயின், (தெரிவு செய்பவராகவிராத) ஏதேனும் அணியின் ஆட்டத்தலைவனாகத் தெரிவு செய்யப்பட்ட ஆளும் தேசியப் பயிற்றுவோனும் அவ்வணியின் ஏனைய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கெனக் குழுவுக்கு ஒத்துத்தேர்ந்தெடுக்கப்படலாம்.

21. (1) தேசியத் தெரிவுக் குழு, இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆட்டக்காரர்களின் பெயர்களை, அத்தகைய தெரிவுக்கான பிரமாணங்கட்களைக் குறிப்பிட்டு அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட ஆட்டக்காரர்களின் பெயர்கள், அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரம் பெறப்படும்வரை வெளிவிடப்படுதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அமைப்பில் நாட்டினதாக அல்லது பிரதிநிதித்துவப்படுத்துவதாக இராத ஒரு களரியை அல்லது வேறு அணியை, அல்லது அமைப்பில் நாட்டினதாகவிராத தனது சொந்த மூலவளங்களுடன் தனது சொந்தத் தன்மையில் பங்குபற்றுகின்ற எவரேனும் தனியாளைத் தெரிவுசெய்வதற்கு ஏற்புடையனவாதலாகாது.

22. ஆளொருவர் பின்வருபவராகவிருந்தாலொழிய, அத்தகைய ஆள் ஏதேனும் சர்வதேசக் கழகத்துக்கு இலங்கையின் பேராளராக அல்லது பிரதிநிதியாக ஒரு தேசியக் கழகத்தினால் நியமிக்கப்படுதலாகாது :-

(அ) அக்கழகத்தினால் மேம்படுத்தப்பட்ட விளையாட்டில் இலங்கை அணியொன்றை, இணைந்துள்ள களரியொன்றை அல்லது ஒழுங்கமைப்பொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள இலங்கைப் பிரசையொருவர் ;

(ஆ) அக்கழகத்தினால் மேம்படுத்தப்பட்ட விளையாட்டில் இலங்கை அணியொன்றை, இணைந்துள்ள களரியொன்றை அல்லது ஒழுங்கமைப்பொன்றைப் பிரதிநிதித்துப்படுத்தியுள்ள முன்னைநாள் இலங்கை நாட்டவர் ;

(இ) தேசியக் கழகத்தினால் மேம்படுத்தப்பட்ட விளையாட்டில் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள பிரசையல்லாதவர் ;

ஆயின், எவரேனுமாள், மேலே குறிப்பிடப்பட்ட பிரமாணங்களை உடையவராகவிராதிருப்பின், அமைச்சர், தேசியக் கழகத்தின் விதப்புரையுடன் இரண்டாண்டுகளுக்குமேல் அத்தகைய கழகத்தின் நிர்வாகத்தில் அனுபவமுள்ள எவரேனுமாளை நியமிக்கலாம்.

23. ஒவ்வொரு தேசியக் கழகமும், அதன் இணைந்துள்ள களரிகளினதும் ஏனைய ஒழுங்கமைப்புகளினதும் பிரதிநிதித்துவப்படுத்தும் முறையையும் வாக்களிக்கும் உரிமைகளையும் அதன் அமைப்புவிதியில் உள்ளடக்குதல் வேண்டும்.

24. ஏதேனும் தேசியக் கழகம், அதன் இணைப்புகளுள் எவற்றுக்கும், இணைக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட காலப்பகுதியொன்று கழியும்வரை, எவையேனும் வாக்களிக்கும் உரிமைகளை அளித்தலாகாது.

25. ஒவ்வொரு தேசியக் கழகத்தினதும் அமைப்புவிதி பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபுடன் அதிருப்பதியடையும் ஏதேனும் தேசியக் கழகம், அத்தகைய முடிவு அத்தகைய கழகத்துக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அமைச்சரின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

26. ஒவ்வொரு தேசியக் கழகமும், ஒவ்வோராண்டும் மாச்சு முப்பத்தோராம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வருடாந்த பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும். கழகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். பதவிதாங்குநர்களின் தேர்தல் இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிதாங்குநர்கள் இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

27. ஒவ்வொரு தேசியக் கழகமும், அதன் வருடாந்த பொதுக்கூட்டத்தில், முற்போந்த நிதியாண்டு தொடர்பிலான ஆண்டறிக்கையொன்றையும் கணக்குகள் பற்றிய கூற்றொன்றையும் பட்டியலிலிடுதல் வேண்டும்.

28. ஒவ்வொரு தேசியக் கழகமும், ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து மூன்று மாதங்களினுள், அந்நிதியாண்டு தொடர்பில் பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், கணக்காய்வு செய்யப்பட்டதுமான கணக்குகள் பற்றிய கூற்றையும் ஆண்டறிக்கையையும் அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

29. ஒரு வருடாந்த பொதுக்கூட்டம் பற்றி ஆகக்குறைந்தது நாற்பது நாட்கால அறிவித்தல் ஒவ்வொரு தேசியக் கழகத்தினாலும் அதன் இணைப்புக்களிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆண்டறிக்கையும், வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிப்பதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் நிரலும் அத்தகைய அறிவித்தலுடன் இணைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் இணைப்பும் பிரயோகிப்பதற்கு உரித்துடையதாகவுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை அத்தகைய அறிவித்தல் குறித்துரைத்தலும் வேண்டும். அத்தகைய வாக்கைப் பிரயோகிக்கின்ற இணைப்பு, ஒவ்வொரு களரியினாலும் கொடுக்கப்பட்ட கட்டளைக்கிணங்கத் தாம் செயலாற்றுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். முற்போந்த நிதியாண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி, வருடாந்த பொதுக்கூட்டதுக்கு ஆகக்குறைந்தது இருவாரங்களுக்கு முன்னர் நியமித்தர்களின் நிரலுடன் சேர்த்து எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

30. (1) முன்னைய ஆண்டில் தேசியக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட ஆகக்குறைந்தது இரு போட்டிகளில் பங்குபற்றியுள்ள ஒவ்வொரு களரியும் அல்லது இணைப்பும், ஒரு தேசியக் கழகத்தின் வருடந்த பொதுக்கூட்டத்தில் வாக்களிப்பதற்குத் தகவுடையதாகவிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய நிரற்போட்டியில் அல்லது போட்டியில் பங்குபற்றியுள்ள ஆட்டக்காரர்களின் பெயர்கள், அத்தகைய வருடாந்த பொதுக்கூட்டத்துக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு களரியும் அல்லது இணைப்பும், ஆண்டு பூராகவும் அதன் அமைப்புவிதிக்கிணங்கியொழுகத் தாம் செயலாற்றியுள்ளதென்ற வெளிப்படுத்துகையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்று, வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஒவ்வொரு களரியும் அல்லது இணைப்பும், தேசியக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்துக்கு ஆகக்குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்னர் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்துதலும் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும்.

31. கூட்டநடப்பெண் இல்லாமை காரணமாக வருடாந்த பொதுக்கூட்டமொன்று பிற்போடப்படின், அதே நிகழ்ச்சி நிரலுடன் கூட்டத்தை மீள நடாத்துவதற்குப் பதினான்கு நாட்கால அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும். மீளக் கூட்டப்பட்ட கூட்டத்தில் கூட்டநடப்பெண் இல்லாதிருக்கும் பட்சத்தில், வருடாந்த பொதுக்கூட்டம், சமுகமளித்துள்ள உறுப்பினர்களுடன் நடைபெறுதல் வேண்டும்.

32. ஒவ்வொரு தேசியக் கழகமும், அதன் பதவிக்காலம் தொடங்குகையில் ஒழுக்காற்றுக் குழுவொன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுக்காற்றுக்குழு, விளையாட்டுக்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவரைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

33. தேசியக் கழகம் ஒவ்வொன்றும், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை நியமித்தல் வேண்டும் ; அவர்கள், இயைபான மாவட்டங்களிலுள்ள களரிகளின் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்புக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், தேசியக் கழகத்துக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

34. தேசியக் கழகம் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தபின்னர் இரண்டு மாதங்களினுள், விளையாட்டுக்களின் அபிவிருத்திக்கான வேலை நிகழ்ச்சித் திட்டத்தை அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

35. அமைச்சிடமிருந்து மானியக்கொடைகளைப் பெறவிரும்புகின்ற ஏதேனும் தேசியக் கழகம், வருடாந்த பொதுக்கூட்டத்துக்குப் பின்னர் இரண்டு மாதங்களினுள் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற வரவு, செலவுத்திட்டமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

36. ஒவ்வொரு தேசியக் கழகமும், தேசிய ஆட்டக்காரர்களாக, பயிற்றுவோராக, ஆட்டநடுவர்களாக அல்லது நடுநிலையறிஞர்களாக விளையாட்டுக்களில் முனைப்பாகச் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களைக் கொண்டுள்ள தொழில்நுட்பக் குழுவொன்றையுடையதாதல் வேண்டும். விளையாட்டின் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாகத் தேசியக் கழகத்துக்கு அவர்கள் மதியுரையளித்தல் வேண்டுமென்பதுடன், விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தையும் நிரற்போட்டிக் கட்டமைப்பையும் அங்கீகரித்தலும் வேண்டும்.

37. ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும், தனிப்பட்ட விளையாட்டு ஆளணியினரின் எந்த முகவர்கள், முகாமையாளர்கள் அல்லது பயிற்றுவோர் என்போரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதோ அவர்களின் இடாப்பொன்றைப் பேணுவித்தல் வேண்டும்.

38. (1) உலக ஆளும் குழுவிடமிருந்து அல்லது இதையொத்த ஒரு குழுவிடமிருந்து நன்கொடைகளாக அல்லது மானியக்கொடைகளாக அல்லது உதவியாக வெளிநாட்டிலிருந்து எவையேனும் மானியக்கொடைகள் அல்லது நிதிகள் பெறப்படின், தேசியக் கழகம், நன்கொடையாளர் முகவர் நிலையத்தினால் விதிக்கப்பட்ட விதிகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றுதலும் அவற்றுக்கிணங்கியொழுகுதலும் வேண்டுமென்பதுடன், ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளுமுன்னர், அமைச்சிடமிருந்து முன்னங்கீகாரம் பெறப்படுதலும் வேண்டும். கழகமானது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அளிப்பின் பிரதியும் நிதிகளைப் பயன்படுத்தும் முறையும் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய எல்லா மானியக்கொடைகளும் அல்லது நிதிகளும் நிதியமைச்சின் வெளிநாட்டுமூலவளங்கள் திணைக்களத்தினூடாக நெறிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) தேசியக் கழகம் ஒவ்வொன்றும், எக்கேள்விப்பத்திரங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து நிதிகள் பெறப்பட்டுள்ளனவோ அல்லது உள்நாட்டில் அல்லது சர்வதேச ரீதியில் திரட்டப்பட்டுள்ளனவோ அக்கேள்விப்பத்திரங்களின் பெறுகையும் அளிப்பும் தொடர்பில் ஏற்புடையற்பாலனவான அரசாங்கக் கேள்விப்பத்திர நடவடிக்கைமுறைகளுக்கு அமைந்ததாகவிருத்தலும் அவற்றைப் பின்பற்றுதலும் வேண்டும்.

(3) இலங்கையில் எவையேனும் சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்கின்ற ஒவ்வொரு தேசியக் கழகமும், பங்குபற்றுகின்ற நாடுகளின் விவரங்கள், வரவு, செலவுத்திட்டங்கள், பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை, திகதிகள், இடங்கள், அத்தகைய நிகழ்வுகளை நடாத்துவதற்குத் தேவைப்பட்ட அல்லது கிடைக்கக்கூடிய வசதிகள் என்பனவும், முன்மொழிவை மதிப்பீடு செய்வதற்கான மற்றெல்லா முக்கியத் தகவல்களும் உட்பட, எல்லாவற்றையும் உள்ளடக்கிய முன்மொழிவொன்றைச் சமர்ப்பிப்பதன்மூலம் அமைச்சரிடமிருந்து முன்னங்கீகாரம் பெறுதல் வேண்டும். எந்தச் சர்வதேசக் கூட்டத்தில் இலங்கையை ஓம்புகின்ற நாடாக முன்மொழிவதற்குத் தேசியக் கழகம் திட்டமிடுகின்றதோ அந்த ஏதேனும் சர்வதேசக் கூட்டத்துக்குச் செல்வதற்கு முப்பது நாட்களுக்கு முன்னர் முன்மொழிவானது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

39. ஏதேனும் ஒழுக்காற்று மீறுகைக்காக இடைநிறுத்தப்பட்ட எவரேனுமாளுக்கு அத்தகைய இடைநிறுத்துகையிலிருந்து ஒரு வாரத்தினுள் குற்றப்பத்திரமொன்று சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பான ஒழுக்காற்று விசாரணை, குற்றப்பத்திரம் எத்திகதியன்று சேர்ப்பிக்கப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து ஆறு வாரங்களினுள் முடிவுறுத்தப்பட்டு விளைவானது அமைச்சருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

40. ஒவ்வொரு தேசியக் கழகமும், வருடாந்த பொதுக்கூட்டத் திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்புகளினது பிரதியொன்றை அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

41. தேசியக் கழகம் ஒவ்வொன்றும்,ஒவ்வோராண்டும் தொடங்கியதிலிருந்து ஆறு மாதங்களினுள், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கழகத்தினால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சாதனங்களும் மற்றும் வேறு மூலவளங்களும் பற்றிய அறிக்கைகளையும் அக்காலப்பகுதியின்போது கழகத்தினால் புரியப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான ஆறுமாத முன்னேற்ற அறிக்கையையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். இவ்வறிக்கைகள் தேசிய விளையாட்டுக்கள் பேரவைக்கு, அதன் பரிசீலனைக்காகவும் அவதானிப்புகளுக்காகவும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

42. பதவி வகிக்காதொழியும் தேசியக் கழகமொன்றின் ஒவ்வொரு பதவி தாங்குநரும் அல்லது குழுவுறுப்பினரும், அவர் அத்தகைய பதவியை வகிக்காதொழியும் திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அவரது உடைமையிலுள்ள அத்தகைய தேசியக் கழகத்தின் ஏதேனும் ஆதனத்தைப் பதவிதாங்குநருக்கு அல்லது குழுவுறுப்பினருக்கு அல்லது விளையாட்டுக்கள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளித்தல் வேண்டும்.

43. ஒவ்வொரு தேசியக் கழகமும், பொருளளவில் இதற்கான அட்டவணை I இன் படிவம் 'ஈ' இல் அதன் இணைப்புக்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

44. ஒவ்வொரு தேசியக் கழகமும், சட்டத்துக்கிணங்கவுள்ள ஒழுக்காற்று விசாரணையொன்றின் பின்னர் அதன் இணைப்புக்களுள் எவற்றினதும் உறுப்பாண்மையை இல்லாதாக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

45. ஒவ்வொரு தேசியக் கழகமும், அமைச்சினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக அத்தகைய தேசியக் கழகத்தின் பயிற்றுவோரையும், நடுநிலையறிஞர்களையும், விளையாட்டு நடுவர்களையும், வேறு அலுவலர்களையும் பதிவு செய்தலும், நியமித்தலும், பயிற்றுதலும் வேண்டும். பயிற்றுவோரையும், நடுநிலையறிஞர்களையும், விளையாட்டு நடுவர்களையும், வேறு அலுவலர்களையும் நியமித்தலானது, உலக ஆளும் குழுவின் வழிகாட்டு நெறிகளுக்கமையவும், பணிப்பாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் மீது அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, பரீட்சைகளுக்குட்பட்ட அத்தகைய கட்டளைகளின் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்.

46. தேசிய கழகம் ஒவ்வொன்றும், அத்தகைய கழகம் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் தொடர்பாகச் செயலாளரினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் அவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

47. தேசியக் கழகம் ஒவ்வொன்றும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அக்கழகத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றுகின்ற ஆட்கள் தொடர்பான எல்லா விபரங்களையும் பதிவு செய்தல் வேண்டும்.

48. தேசிய கழகம் ஒவ்வொன்றும், தேசிய அணிகளின் ஆட்டக்காரர்களைத் தெரிவு செய்வதில், அமைச்சரினால் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

49. ஒவ்வொரு தேசியக் கழகத்தினதும் தெரிவு, தரப்படுத்துகை மற்றும் இசைவளிப்புக் குழுக்கள், ஒவ்வோராண்டினதும் தொடக்கத்தில், முன்னைய ஆண்டின்போது தரப்படுத்துதல் நிரற்போட்டிகளில் பங்குபற்றிய ஒவ்வோர் ஆட்டக்காரரினதும் எய்துகைப் பதிவேடுகளை அத்தகை கழகத்துக்கும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

50. பணிப்பாளர் தலைமையதிபதி, தேசிய விளையாட்டு வாக்கெடுப்புக்களினதும் தேசியக் கழகங்களினதும் செயற்பாடுகளைக் கண்காணித்தல் வேண்டுமென்பதுடன், தேசிய அணிகளைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிகளை வழங்குதலும் வேண்டும்.

51. பணிப்பாளர் தலைமையதிபதி, சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எல்லா ஆட்டக்காரர்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய முடி அணியப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

52. ஒவ்வொரு தேசியக் கழகமும், அது எந்த விளையாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதோ அந்த விளையாட்டை ஒவ்வொரு மட்டத்திலும் மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விளையாட்டிலான ஆட்டக்காரர்களின் பங்குபற்றுகையை அதிகரிப்பதற்கென அத்தகைய விளையாட்டிற்கான வசதிகளைச் சீராக்குதலும் வேண்டும்.

53. தேசிய அணிகளின் முகாமையாளர்களும், வெளிநாட்டில் தேசியக் கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பேராளர்களும், அவர்கள் இலங்கைக்குத் திரும்பியதிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய அணியினாலான அல்லது பேராளரினாலான எவையேனும் வெளிநாட்டு விளையாட்டுச் சுற்றுலாக்கள் பற்றிய அறிக்கையொன்றை இயைபான தேசியக் கழகத்தின் செயலாளரினூடாக அமைச்சருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

54. (1) எவரேனும் ஆள், ஏதேனும் குழு களரி, ஒழுங்கமைப்பு அல்லது இணைப்பொன்று, அவரின் அல்லது அதன் தேசியக் கழகத்தினது முடிபினால் இன்னலுறுமிடத்து, அத்தகைய ஆள், குழு, களரி, ஒழுங்கமைப்பு அல்லது இணைப்பு, அத்தகைய ஆளுக்கு, குழுவுக்கு, களரிக்கு, ஒழுங்கமைப்புக்கு அல்லது இணைப்புக்கு அத்தகைய முடிவு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்காலப்பகுதியினுள் அமைச்சருக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

(2) அத்தகைய மேன்முறையீட்டின்மீது அமைச்சரின் கட்டளைக்கு அத்தகைய தேசியக் கழகத்தினால் பயன்கொடுக்கப்படுதல் வேண்டும்.

55. (1) சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நியதிகளின்படி அமைச்சரினால் இடைக்கால ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படுவதன்மேல், எத்தேசிய விளையாட்டுக்கள் கழகம் இடைநிறுத்துகையின் கீழுள்ளதோ அல்லது எத்தேசிய விளையாட்டுக்கள் கழகத்தின் பதிவு மறுக்கப்பட்டுள்ளதோ அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அக்கழகத்தின் பணிகளைத் தொடர்ந்து புரிவதற்கான பணி பொறுப்பிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள் அல்லது ஆட்கள், அத்தகைய தேசியக் கழகத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக, அத்தகைய தேசியக் கழகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது அதன் சட்டமுறையான ஆட்சியிலுள்ள எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் முகாமை செய்தல் வேண்டுமென்பதுடன், தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவிதாங்குநர்களாக அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை முகாமை செய்து கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும். இது தொடர்பில், அத்தகைய தேசியக் கழகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது அதன் சட்டமுறையான ஆட்சியிலுள்ள அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களைக் கையேற்றலும் தகுந்த முறையில் ஆவணப்படுத்தப்படுதலும் பதியப்படுதலும் வேண்டுமென்பதுடன், அதன் பிரதியொன்று பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய தேசியக் கழகத்தின் பணிகளைத் தொடர்ந்து புரிதல் பொறுப்பிக்கப்பட்ட ஆட்கள் தமது பணிகளை விழிப்புக் கவனத்துடன் நடாத்துவதும், அவர்களுக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஆதனங்களை விழிப்புக்கவனத்துடன் முகாமை செய்தலும் கட்டுப்படுத்துவதும் அவர்களது கடமையாதல் வேண்டும்.

(3) இடைநிறுத்துகையின் கீழுள்ள அல்லது அதன்பதிவு மறுக்கப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் பணிகளைத் தொடர்ந்து புரிவதற்காகச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நியதிகளின்படி எவையேனும் இடைக்கால ஒழுங்கேற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள், மற்றவற்றுக்கிடையில் எவையேனும் ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதலும் மற்றும் வங்கிக்கணக்குகளைத் தொழிற்படுத்துதலும் என்பவற்றுக்கான உரிமைகளுட்பட, இடைநிறுத்துகையின் கீழுள்ள அல்லது அதன் பதிவு மறுக்கப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக் கழகத்தினால் துய்க்கப்பட்டவற்றைப் போன்ற அதே தத்துவங்கள், உரிமைகள், சிறப்புரிமைகள் என்பன எல்லாவற்றையும் துய்த்தல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட ஆள் அல்லது ஆட்கள், இடைநிறுத்துகையின் கீழுள்ள அல்லது அதன் பதிவு மறுக்கப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக் கழகத்தின் எல்லா அலுவல்களையும் தொடர்ந்து புரிவதற்கு முழுத்தத்துவமுடையவராதலும் அல்லது உடையோராதலும் வேண்டும். அத்துடன் இடைநிறுத்துகையின் கீழுள்ள அல்லது அதன் பதிவு மறுக்கப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக்கள் கழகத்தின் பணிகளைத் தொடர்ந்து புரிவதற்குச் சொல்லப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் தகுதியெனக் கருதக்கூடியவாறான புதிய ஒழுங்கேற்பாடுகளை அல்லது கருத்திட்டங்களை அவர் அல்லது அவர்கள் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(4) சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட இடைக்கால ஒழுங்கேற்பாட்டுக் காலப்பகுதி முடிவுறுவதன்மேல், ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவிதாங்குநர்கள், மற்றவற்றுக்கிடையில் இடைநிறுத்துகையின் கீழுள்ள அல்லது அதன் பதிவு மறுக்கப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் பணிகளைத் தொடர்ந்து புரிவதற்காக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆளினால் அல்லது ஆட்களினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் முடிபுகள் என்பன உட்பட்ட முடிவுகளை நிலைநாட்டுவதற்கும் அவற்றுக்கு மதிப்புக் கொடுப்பதற்கும் கடப்பாடுடையவர்களாகவிருத்தலும் சட்டப்படி கட்டளையிடப்பட்டவர்களாகவிருத்தலும் வேண்டும்.

56. 1975 ஆம் ஆண்டு மாச்சு 2 ஆந் திகதிய 155/66 ஆம் இலக்க, 1976 ஆம் ஆண்டு மாச்சு 8 ஆந் திகதிய 203/3 ஆம் இலக்க, 1977 ஆம் ஆண்டு பெப்புருவரி 17 ஆந் திகதிய 252/8 ஆம் இலக்க, 1977 ஆம் ஆண்டு ஏப்பிறல் 7 ஆந் திகதிய 259/8 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டு நவெம்பர் 19 ஆந் திகதிய 167/6 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டு மாச்சு 8 ஆந் திகதிய 496/8 ஆம் இலக்க, 2002 ஆம் ஆண்டு பெப்புருவரி 7 ஆந் திகதிய 1222/16 ஆம் இலக்க, 2002 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 1255/7 ஆம் இலக்க, 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் 23 ஆந் திகதிய 1285/12 ஆம் இலக்க, 2005 ஆம் ஆண்டு மே 21 ஆந் திகதிய 1389/24 ஆம் இலக்க மற்றும் 2008 ஆம் ஆண்டு யூலை 16 ஆந் திகதிய 1558/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுக் கழகங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

57. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

“சட்டம்” என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் என்று பொருளாகும்.

“பணிப்பாளர் தலைமையதிபதி” என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விளையாட்டுக்கள் பணிப்பாளர் தலைமையதிபதி என்றும் பொருளாகும்.

“பாரிய நிரற்போட்டி”, “விளையாட்டுப்போட்டி” அல்லது “போட்டி” என்பது, ஒரு தேசியக் கழகத்தினால் அதற்கென செய்யப்பட்ட விதப்புரையின் மேல் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான ஒரு நிரற்போட்டி, விளையாட்டுப்போட்டி அல்லது போட்டி என்று பொருளாகும்.

“அசைவுள்ள ஆதனம்” என்பது, கழகத்தின்வசமுள்ள, அல்லது அரசாங்கப் பிணைப்பொறுப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், கடன்தொகுதிப்பத்திரங்கள் அல்லது வேறேதேனும் முதலீடு என்பவற்றிலாயினுஞ்சரி ஒரு வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் அதன் வரவுக்கு வைத்திருக்கப்படும் எல்லாப் பணங்களும் என்று பொருளாகும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 3)

படிவம் 'அ'

### தேசியக் கழகமொன்றின் பதிவுக்கான விண்ணப்பம்

1. தேசியக் கழகத்தின் பெயர் :........................................................................................................................................

2. முகவரி :..........................................................................................................................................................

3. ................................................................................ ஐ மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டவொரு கழகமாகவுள்ள (கழகத்தின் பெயர்) :................................................................................
   தேசியக் கழகத்தை அமைத்துருவாக்கிய தேதி :

4. பின்வரும் ஆவணங்கள் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன :........................................................................

5. மேலே குறிப்பிடப்பட்ட தற்போதைய பதவிதாங்குநர்களும் குழு உறுப்பினர்களும்.

   தேர்ந்தெடுக்கப்பட்ட வருடாந்த பொதுக்கூட்டத் திகதி :........................................................................................

   பதிவுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு உரியமுறையில் அதிகாரமளித்து ...............................................................இன் (தேசியக் கழகத்தின் பெயர்) பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விளைவாக விண்ணப்பம் செய்யப்படுகின்றது.

தேசியக் கழகத் தலைவரின் கையொப்பம் :

பெயரும் முகவரியும் :

திகதி :

தேசியக் கழகச் செயலாளரின் கையொப்பம் :
பெயரும் முகவரியும் :

விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

(ஒழுங்குவிதி 4)

படிவம் 'ஆ'

### தேசியக் கழகமொன்றின் பதிவுச் சான்றிதழ்

தேசியக் கழகத்தின் பெயர் :.....................................................................................................................................
............................................... கழகம் ............................................................ க்கான தேசியக் கழகமாக 20................ ஆம் ஆண்டு.......................... மாதம் ......................................... ஆந்நாளாகிய இன்றிலிருந்து 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது. அத்தகைய கழகத்துக்கு அளிக்கப்பட்ட பதிவிலக்கம் ............................. ஆகும்.

விளையாட்டுக்கள் அமைச்சர்.

திகதி :

(ஒழுங்குவிதி 6)

படிவம் 'இ'

பாகம் 'அ'

### தேசியக் கழகங்களுடன் நேரடியாக இணைந்துள்ள உறுப்பினர்களின் இடாப்பு

1. தேசியக் கழகத்தின் பெயர் :........................................................................................................................................

2. இணைக்கப்பட்ட குழுவின் பெயர் : ...............................................................................................................................

3. முகவரி :..........................................................................................................................................................

4. உறுப்பினர்களின் எண்ணிக்கை : ...................................................................................................................................

5. வருடாந்த பொதுக்கூட்டங்களில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை: :............................................... .........................

6. வருடாந்த பொதுக்கூட்டங்களில் உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை :...................................... ...............................................................

7. உறுப்பினர்களின் பெயர்கள் :.......................................................................................................................................

8. பதவிப் பெயர்களுடன் பதவிதாங்குநர்களின் பெயர்களும் முகவரிகளும் :.................................................................................

9. குழுக்களின் உறுப்பினர்களினது பெயர்களும் முகவரிகளும் :.................................................................................................

### பாகம் 'ஆ'

### தேசியக் கழகங்களுடன் இணைந்துள்ள மாகாணக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், சம்மேளனங்கள், குழுமங்கள் அல்லது வேறெவையேனும் ஒழுங்கமைப்புக்களுடன் இணைந்துள்ள உறுப்பினர்களின் இடாப்பு

1. மாகாணக் கழகம், மாவட்டக் கழகம், சம்மேளனம், குழுமம் அல்லது வேறேதேனும் ஒழுங்கமைப்பு என்பவற்றின் பெயர் :..........................................................................................................................................................
2. முகவரி :..........................................................................................................................................................
3. இணைக்கப்பட்ட குழுவின் பெயர் :........................................................................................................................
4. முகவரி :..........................................................................................................................................................
5. உறுப்பினர்களின் எண்ணிக்கை :..........................................................................................................................
6. பதவிப்பெயர்களுடன் பதவிதாங்குநர்களின் பெயர்களும், முகவரிகளும் :.......................................................................
7. குழுக்களின் உறுப்பினர்களினது பெயர்களும் முகவரிகளும் :..........................................................................................

இணைப்பு : II

1.பட்மின்ரன்
2. நீர் விளையாட்டுக்கள்
3. உடற் கட்டுமானம்
4. சைக்கிளோட்டம்
5. துப்பாக்கியால் சுடுதல்
6. ஹொக்கி
7. கராட்டே டோ
8. பாய்த தோணிகள்
9. றக்பி காற்பந்து
10. பளு தூக்கல்
11. ஜிம்னாஸ்ரிக்
12. கோல்வ்
13. குத்துச்சண்டை
14.ஓட்டோ மொபைல் விளையாட்டுக்கள்
15. கூடைப்பந்தாட்டம்
16. மெய்வல்லுநர்
17. கிரிக்கெட்
18. வலைபந்து
19. ரெனிஸ்
20.பிரிட்ஜ்
21.கரம்
22. உயிர்க்காப்பு
23. பயிலுநர் குத்துச் சண்டை
24. யூடோ
25. பில்லியாட் மற்றும் ஸ்னூக்கஸ்
26. காற்பந்து
27. சாப்பந்து
28. எல்லே
29. சதுரங்கம்
30. துடுப்பு வலித்தல்
31. மேசைப் பந்து
32. ஸ்குவாஷ்
33. ரைக்வொன்டோ
34. மென்பந்து கிரிக்கெட்
35. திறன் உயர்த்தல்
36. கபடி
37. மாற்றுத் திறனாளிகளிற்கான விளையாட்டுக்கள்
38. மோட்டார் சைக்கிள் விளையாட்டுக்கள்
39. பேஸ் போல்
40. வூசு
41. துரோபோல்
42. ஈட்டிக்கலை
43. குதிரையேற்றம்
44. பாரம்பரிய கராட்டே
45. கைப்பந்து
46. ரக் - ஓவ் - வோர்
47. சுடுதல்
48. வாட் போட்டி.

2- 14

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

4 - PG001521